**சுருக்கம்**

கல்லூரிக் கல்வித் துறை – 2012–13 ஆம் ஆண்டு பகுதி II திட்டம் – கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.6.90 இலட்சம் தொடரா செலவினத்திற்கு ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.94

நாள் 11.6.2012
வைகாசி 29
திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:–

கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ) கடித எண்.49182/H3/2011, நாள்.30.1. 2012.

–––––

ஆணை:-

கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு 2012–2013ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.6.90 இலட்சம் ஒப்பளிப்பு செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ) அரசைக் கோரியுள்ளார்.

2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் (பொ) கருத்துருவை ஆராய்ந்து, கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.6.90 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) தொடரா செலவினமாக 2012–13ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது :-

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் | தேவைப்படும் கணினிகள் மற்றும் உபகரணங்களின் விவரம் | எண்ணிக்கை | அலகு ஒன்றிற்கு ரூ. | மொத்த விலை ரூ. | பகுதி II திட்டத்தில் தேவைப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை–600 006 | a) கணினிகள் | 10 | 40000 | 400000 | **690000** |
| | | b) லேசர் பிரிண்டர் | 10 | 20000 | 200000 | |
| | | c) யு.பி.எஸ். 5 கே.வி.ஏ. (ஒரு மணிநேரம் தாங்கும் திறனுள்ளது) | 1 | 70000 | 70000 | |
| | | d) தொடர் கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் | | 20000 | 20000 | |

3. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :-

> 2202 – பொதுக் கல்வி 03 – பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 001 – நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JA – கல்லூரிக் கல்வி இயக்ககம் – 76 – கணினியும் துணைப்பாகங்களும் - 01 – வாங்குதல் (கு.தொ.கு. 2202 – 03 – 001 – JA – 7618 )

4. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு (பொ) அனுமதி அளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 27820/Edn-I/12 நாள் 30.5.2012–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35
நிதி (கல்வி–1) துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 12.6.2012